பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 11 வியாழக்கிழமை 25.01.2024 அதிர்வு 178

## வாகன விபத்தில் தந்தை, மகன் பலி

### தாய் படுகாயம்

புத்தளம், ஆனமடுவ – நவகத்தேகம பிரதான வீதியில் லபுகம பகுதியில் இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர்

04



### நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

# சனத் நிஷாந்த விபத்தில் சாவு!



## பாதுகாப்பு அதிகாரியும் மரணம்

## வாகன சாரதி தீவிர சிகிச்சையில்

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த சாவடைந்துள்ளார். அவரின் பாதுகாப்பு அதிகாரியும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஜீப் ரக வாகனம், முன்னால் பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் வாகனத்துடன் மோதி, வீதிப் பாதுகாப்பு வேலியிலும் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

04





# திருமண நிகழ்வுக்குச் சென்றுவிட்டு திரும்பும்போதே விபத்தில் சனத் பலி

## வேதனையில் புதுமணத் தம்பதி

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உயிரிழப்பதற்கு முன்னர் சிலாபம் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றுக்குச் சென்றுள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்ற அவர், இரவு சமூக ஊடகச் செயற்பட்டாளர் ஒருவரின் திருமண நிகழ்வுக்குச் சென்றுவிட்டு மீண்டும் கொழும்பு திரும்பும்போதே விபத்தில் சிக்கியுள்ளார்.

திருமணமான மணமகன் இது தொடர்பில் பேஸ்புக்கில் பதிவிட்டு தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

“மாமா சனத் நிஷாந்தவுக்கு என்ன நடந்தது என்று கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. எனக்காக – என்னைப் பார்க்க வந்த பயணத்தில் இந்தத் துயரச் சம்பவம் நடந்தது என் பதனை நான் எப்படித் தாங்கிக் கொள்வேன். ஆத்மா சாந்தி அடையட்டும் மாமா.” – என்று அவர் பதிவிட்டுள்ளார். திருமண வைபவத்தின் போது சனத் நிஷாந்தவுடன் புதுமணத் தம்பதி எடுத்துக்கொண்ட ‘செல்பி’ புகைப்படம் தற்போது முகநூலில் வைரலாகியுள்ளது.

# கொள்கலன் வாகனத்தின் சாரதி கைது!

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் கொள்கலன் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் ஜீப் ரக வாகனம், முன்னால் சென்ற கொள்கலன் வாகனத்துடன் மோதி பின்னர் வீதியின் அருகில் இருந்த பாதுகாப்பு வேலியில் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்டுள்ள கொள்கலன் வாகனத்தின் சாரதி விசாரணைக்காகப் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது



விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# கனடா ஒன்றாரியோ முது தமிழ் மன்ற மரபுத் திங்கள் தைப்பொங்கல் விழா













கனடா ஒன்றாரியோ முது தமிழ் மன்றத்தின் மரபுத் திங்கள் தைப்பொங்கல் விழா நேற்று Baba Banquet மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முது தமிழ் மன்றத்தினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன், மன்றத்தின் 38ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வும் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

அத்துடன் மன்றத்தின் சொந்தக் கட்டட நிர்மாணப் பணிக்கான அங்குரார்ப்பண நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

முது தமிழ் மன்றத்தின் தலைவர், மன்றத்தின் முன்னாள் தலைவர்கள் மற்றும் நிர்வாகத்தினர் இதன்போது மன்றத்துக்கான சொந்தக் கட்டடத்தின் தேவை குறித்து மன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவு படுத்தினார்கள்.



# வெளித் தோற்றத்தை வைத்து மனிதர்களைக் கணிக்காதீர்கள்

## சனத் நிஷாந்த அதிகாலை 1.37 இற்கு பேஸ்புக்கில் இட்ட பதிவு




கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்திருந்தது. இந்நிலையில், சனத் நிஷாந்த இன்று அதிகாலை 1.37 மணிக்கு தனது பேஸ்புக் கணக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.

பேஸ்புக் பக்கம் ஒன்றினால் வெளியிடப்பட்ட வீடியோ காணொளி ஒன்றையே அவர் இவ்வாறு பகிர்ந்துள்ளார்.

“வெளித் தோற்றத்தைப் பார்த்து ஒருபோதும் மனிதர்களைக் கணிப்பிட வேண்டாம். இன்று சமூகத்தில் பெரும்பாலானோர் இதனையே செய்கின்றனர்.” – என்று அந்த வீடியோ பதிவு அமைந்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சனத் நிஷாந்த...**

இதன்போது ஜீப்பில் பயணித்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, அவரின் பாதுகாப்பு அதிகாரி மற்றும் சாரதி ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.

இதனையடுத்து அவர்கள் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கு இராஜாங்க அமைச்சரும், ஜெயக்கொடி என்ற பொலிஸ் கான்ஸ்டபிளும் உயிரிழந்தனர். சாரதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் ஆர். 11.1 கிலோமீற்றர் தூணுக்கு அருகில் இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தில் சாவடைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு அரசியல்வாதிகள் பலரும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

ராஜபக்ஷக்களின் நெருங்கிய சகாவான சனத் நிஷாந்த, கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

கொழும்பு – காலிமுகத்திடலில் கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டக்காரர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளில் சனத் நிஷாந்தவின் பெயரும் பதிவாகியுள்ளது. நீதிமன்றங்களில் அவருக்கு எதிராகப் பல வழக்குகளும் நிலுவையில் உள்ளன.







**வாகன விபத்தில்...**

உயிரிழந்துள்ளனர்.

தந்தையும், மகனும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலத்த காயமடைந்த தாய் புத்தளம் வைத்தியசாலையின் தீவிர சிசிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தி ஒன்றுடன் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# பொலிஸ் அதிகாரி ஒருவர் தனியார் பஸ் மோதி சாவு!

வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கதிர்காமம் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் வெலிமடை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிளே சாவடைந்துள்ளார்.

நேற்று மாலை திஸ்ஸமஹாராம – கதிர்காமம் வீதியில் புஞ்சி அகுருகொட பிரதேசத்தில் தனியார் பஸ் ஒன்று திஸ்ஸமஹாராமவில் இருந்து கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

பஸ், இரட்டைக் கோடு விதிகளை மீறி, அதே திசையில் சென்ற டிரக்டரை முந்திச் செல்லும்போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்னால் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பலத்த காயங்களுக்குள்ளாகி தெபரவெவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# கந்தக்காடு முகாமிலிருந்து தப்பியோடிய 25 கைதிகளைத் தொடர்ந்தும் தேடல்

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச்சென்ற கைதிகளில் 25 கைதிகள் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றிரவு வெலிக்கந்த – கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் இரண்டு குழுவினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டது.

இதனையடுத்து 75 கைதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

அவர்களில் 17 கைதிகள் பொலன்னறுவை – சுங்காவில் சோமாவதி பாலத்திற்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டனர்.மேலும் சிலர் புனர்வாழ்வு நிலையத் திற்கு திரும்பியிருந்தனர் என தெரி விக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட கைதிகள் பொலன்னறுவை நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

# தேரர் ஒருவரைக் குறிவைத்து மீண்டும் ஒரு துப்பாக்கிச்சூடு!

குருநாகல், தொடங்கஸ்லந்த – உடத்தபொலவில் அமைந்துள்ள விகாரையை இலக்கு வைத்து நேற்று இரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விகாராதிபதி கல்னேவ பன்னகித்தி தேரரின் வரவேற்பறையில் உள்ள ஜன்னல் ஒன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட போதிலும், பன்னகித்தி தேரர் அப்போது விடுதியின் வேறொரு இடத்தில் உறங்கிக் கொண்டிருந்ததால் அவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

கம்பஹாவில் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளைப் போல் பாவனை செய்து இனந்தெரியாத நான்கு நபர்களால் பௌத்த பிக்கு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு நாளின் பின்னர் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# சிவனொளிபாதமலை செல்லும் யாத்திரிகர்களுக்கு விசேட பாதுகாப்பு

சிவனொளிபாதமலைக்கு செல்லும் யாத்திரிகர்களின் நலன் கருதி இன்று விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

வருடத்தின் முதலாவது பூரணை தினம் இன்று என்பதால், பெரும்பாலான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை மேற்கொள்வதாக ஹட்டன் நல்லத்தண்ணி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனால், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொருளாதாரப் பயங்கரவாதிகள்

ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' அர்த்தப்படுத்தி, தமிழ் விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகளாகச் சித்திரித்து, அந்தப் போராட்டத்தை அழித்தொழித்த சிங்களத்தின் மத்தியில் இப்போது இன்னொரு பயங்கரவாதம் குறித்துப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

தமிழர்களின் சுதந்திரத்திற்கான ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாக அடையாளப்படுத்தி, அதை அழித்தொழித்த ராஜபக்ஷக்களே இப்போது தென்னிலங்கையில் இன்னொரு ரகமான பயங்கரவாதிகளாக முன்னிறுத்தப்படுகின்றார்கள்.

இதுதான் இயற்கை நீதியின் விளைவோ, என்னவோ...!

யுத்த வெற்றியாளர்களாகத் தங்களை முன்னிறுத்தியபடி, அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்த ராஜபக்ஷக்கள், பொருளாதாரப் பயங்கரவாதிகளாகச் செயற்பட்டு, நாட்டைச் சூறையாடி, அதனை வங்குரோத்து நிலைக்கும், மீளெழவே முடியாத மிக மோசமான பேரிழப்புக் கட்டத்துக்கும் தள்ளியுள்ளனர் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ் சாட்டுகின்றார்.

இந்தப் பொருளாதாரப் பயங்கரவாதிகள் நாட்டை சீரழித்த தமது மோசமான குற்றங்களுக்காகப் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. தண்டிக்கப்படவும் இல்லை. மாறாக, நாட்டின் ஜனாதிபதியின் ஆசீர்வாதத்துடனும் துணையுடனும் சுகபோக வாழ்வு வாழ்கின்றனர் என எதிர்க் கட்சித்தலைவர்சீறுகின்றார். பொருளாதாரப் பயங்கரவாதிகளை பாதுகாக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டைத் தின்று ஏப்பமிட்டவர்களுக்கு காப்பரணாக இருப்பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் என்று சஜித் குற்றம் சுமத்துவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

பொருளாதாரப் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை பாதுகாத்து மீட்டெடுக்கும் உயரிய மனிதாபிமான பணியைத் தனது ஐக்கிய மக்கள் சக்தி கட்சியும், அது இணைந்துள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியும் முன்னெடுக்கும் என்றும் அவர் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகச் சித்திரித்து, அவர்களை அழித்து, அவர்களின் பிடியிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்கும் 'மனிதாபிமானப் பணி'யையே தாங்கள் யுத்தத்தின் மூலம் செய்தனர் என்று ராஜபக்ஷக்கள் தங்கள் யுத்த வெற்றியை புளகாங்கிதத்துடன் அர்த்தப்படுத்தினர்.

அதே ராஜபக்ஷக்களின் குடும்பத்தினரிடமிருந்து நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கும் 'மனிதாபிமான பணி'யைத் தாங்கள் முன்னெடுக்கின்றனர் என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்.

தரமற்ற உரங்களைக் கொண்டு வந்து விவசாயத்தை அழித்து, அதிக விலைக்கு நானோ உரங்களை இறக்குமதி செய்து, வேளாண்மையை நாசமாக்கிய இந்தத் திருட்டுக் கும்பலை சட்டத்தின் முன் நிறுத்தி, திருடப்பட்ட பணத்தை மீண்டும் எமது நாட்டிற்குக் கொண்டு வருவோம் என எதிர்க்கட்சி தலைவர் சூளுரைத்திருக்கின்றார்.

இந்த நாட்டைச் சூறையாடிய பொருளாதார பயங்கரவாதிகள் யார் என்பதை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பகிரங்கமாக அடையாளப்படுத்தி, அம்பலப்படுத்தும் பணியை எதிர்க்கட்சியாகத் தாங்களே வெற்றிகரமாக முன்னெடுத்தார்கள் என்று கூறும் சஜித் பிரேமதாஸ, தங்களது புதிய அரசில், அவர்கள் இழைத்த பொருளாதாரப் பயங்கரவாதக் குற்றங்களுக்காகச் சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தி, உரிய தண்டனைகளை வாங்கிக் கொடுப்பது மட்டுமில்லாமல், அவர்களால் சூறையாடப்பட்டு வெளிநாட்டில் கொண்டு போய் பதுக்கி, முடக்கப்பட்டிருக்கும் அரசின் நிதி ஆதாரங்கள், சொத்துக்களை அங்கிருந்து நாட்டுக்கு மீட்டு வந்து நாட்டை செழுமைப் படுத்துவோம் என்றும் உறுதி கூறியிருக்கிறார்.

நடந்தால் நல்லதுதான்..!

# கொட்டாஞ்சேனையில் துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு - கொட்டாஞ்சேனை, ஜிந்துப் பிட்டியில் நேற்று இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், துப்பாக்கியுடன் சந்தேக நபரை பிரதேசவாசிகள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.



# த.தே.ம. முன்னணி அமைப்பாளருக்கும் மகனுக்கும் தொடர்ந்தும் விளக்கமறியல்

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக பயங்ரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் மற்றும் அவரது மகன் ஆகியோரை எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் 27 ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா மற்றும் அவரது மகன் ஆகியேர் வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் மாவீரர்களுக்கான விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டவர்களை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைக்காக நீதிமன்ற அனுமதியை கோரி விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மேற்படி வழக்கு விசாரணைக்காக நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.



# ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவை சங்கத்தின் கல்முனை கிளையின் பொதுச்சபை கூட்டம்



ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை கிளையின் பொதுச்சபை கூட்டமும் நிருவாக சபை தெரிவும் அண்மையில் இடம்பெற்றது. சங்கத்தின் அம்பாறை மாவட்ட பிராந்திய ஏற்பாட்டாளர் எஸ்.எ.உமிர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி கிளைக் கூட்டத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிருவாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக எ.எம்.ஜெலீல், செயலாளராக எஸ்.எம்.இத்ரீஸ் மற்றும்

பொருளாலராக எம்.வி.நசீர் ஆகியோருடன் உபதலைவராக ஆர்.ஏ.டீ. எஸ்.ராஜபக்ஷ , உபசெயலாளராக எ.எம்.முக்தார் ஆகியோருடன் உயர்பீட உறுப்பினர்களாக 13 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சின்ஹா பொதுக்கூட்ட, நிருவாக தெரிவு நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக வைத்தியசாலையின் நிருவாக உத்தியோகத்தர் திருமதி குமுதினி, பதில் நிருவாக உத்தியோகத்தர் மற்றும் சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# இரு குழுக்களுக்கிடையில் மோதல்; பெண் உட்பட ஆறு பேர் காயம்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற மோதலில் பெண் ஒருவர் உட்பட ஆறு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் 28 தொடக்கம் 58 வயதுக்கு இடைப்பட்ட நபர்களே காயமடைந்துள்ளனர்.

மிரிஸ்வெவ பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த சேனைப்பயிர்ச் செய்கைக்குள் மாடுகள் புகுந்து நாசமாக்கியுள்ளதாக சேனைப்பயிர் செய்கையாளர், மாட்டின் உரிமையாளரிடம் நஷ்டஈடு கோரியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் பெண்ணொருவர் உட்பட ஆறுபேர் காயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர், பெண் மற்றும் வயோதிபர் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சனத் நிஷாந்தவின் வெற்றிடத்துக்கு ஜகத் பிரியங்கர நியமிக்கப்படுகிறார்

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளதை தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினராக ஜகத் பிரியங்கர நியமிக்கப்படவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பெறுபேறுகளின் பிரகாரம், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் புத்தளம் மாவட்டத்தில் விருப்பு வாக்குகளை பெற்றுக்கொண்ட வேட்பாளர்களின் பட்டியலில் சனத் நிஷாந்தவுக்கு அடுத்தபடியாக ஜகத் பிரியங்கர உள்ளார். இவர் 45,272 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு புத்தளம் மாவட்டத்துக்கு ஐந்து ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன.

அருந்திக பெர்னாண்டோ, சிந்தக்க அமல் மாயாதுன்ன, பியங்கர ஜயரத்ன, அசோக பியந்த, சனத் நிஷாந்த ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்ட சனத் நிஷாந்த 80,082 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக அவர் பதவி வகித்தார். கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சனத் நிஷாந்த உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர்.

# ஞாயிற்றுக்கிழமை சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகள்

வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

இறுதிக்கிரியைகளை புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சனத் நிஷாந்தவின் பூதவுடல் இன்று மாலை 5.30 மணியளவில் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை காலை 10.30 மணியளவில் புத்தளத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

# சிறுத்தை தாக்கியதால் பெண் வைத்தியசாலையில்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லெமலியர் தோட்டத்தில் பெண் தொழிலாளி ஒருவர் சிறுத்தை தாக்குதலுக்கு இலக்காகி பலத்த காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் லெமலியர் தோட்டத்தை சேர்ந்த பி.சத்தியவாணி (வயது 36) என்பவர் சிறுத்தையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மேற்படி பெண் நேற்று தலவாக்கலை –நுவரெலியா பிரதான வீதியின் லிந்துலை நகரை அண்மித்த தேயிலை தோட்டத்தில் பணியில் ஈடுப்பட்டிருந்த வேளையில் தேயிலை மலையில் பதுங்கியிருந்த சிறுத்தை அவரை தாக்கியுள்ளது.

கொழுந்து பறித்துக்கொண்டிருந்த போது, அந்த சிறுத்தை பெண்ணின் தலையை குறிவைத்து தாக்கியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து, அருகில் தொழில் செய்துகொண்டிருந்த தொழிலாளிகள் கூச்சலிட்டு சிறுத்தையை துரத்தியுள்ளனர்.

அத்துடன், காயங்களுக்கு உள்ளான பெண்ணை மீட்டு லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வீரமுனை வழிபாட்டுப் பிள்ளையாரில் தைப்பூச புதிர் எடுத்தல் நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)


தைப்பூச நாளில் பாரம்பரிய புதிர் எடுத்தல் நிகழ்வு வீரமுனை ஸ்ரீ வழிபாட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

வீரமுனை கிராமத்தில் வயல் வெளியில் நெற்கதிர் அறுத்தல் நிகழ்வானது ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீ கிஷோவேந்தன் சர்மா மற்றும் சிவ ஸ்ரீ முரளிதரன் ஜயா தலைமையில் ஆலய பரிபாலனசபையினரின் ஒத்துழைப்புடன் வீரச்சோலை வயல் வெளியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலும் கலந்து கொண்டார்.











# தேசிய வைத்தியசாலைக்கு ரோட்டரி கழகம் மருத்துவ உபகரணங்களை வழங்கியது

இலங்கை தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்காக ரூபா 35 மில்லியன் பெறுமதியான முக்கியமான பராமரிப்பு உபகரணங்களை ரோட்டரி கழகம் கையளித்துள்ளது.

இந்த நிகழ்வு நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் நடைபெற்றது.

இந்த திட்டத்தை மேற்கு கொழும்பு ரோட்டரி கிளப், ஜப்பானின் தெற்கு ஹமாமட்சு ரோட்டரி கிளப் மற்றும் ரோட்டரி மாவட்டங்கள் 3220 மற்றும் 2620 உடன் இணைந்து ரோட்டரி இன்டர்நேஷனல் அறக்கட்டளையின் மானியத்துடன் மேற்கொண்டது.

ரோட்டரி இன்டர்நெஷனல் தலைவர் கார்டன் ஆர். மெக்னலி மற்றும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன், செயலாளர் மற்றும் இயக்குநர் ஜெனரல் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் முன்னிலையில் இவை கையளிக்கப்பட்டன.













# நெடுந்தீவில் உழுந்து அறுவடை ஆரம்பித்து வைக்கப்பட்டது

நெடுந்தீவில் உழுந்து அறுவடை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் விவசாய வேலைத்திட்டத்தின் கீழ் 'நல வாழ்வு நம்கையில்' தொடர் வேலைத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட உழுந்து அறுவடை நிகழ்வு நேற்று நெடுந்தீவு கிழக்கு சண்ணாங்குளம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

அறுவடை நிகழ்வினை நெடுந்தீவு கிழக்கு பகுதியை சேர்ந்த விவசாயி தபிரபாரத்தினம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்க ஊரும் உறவும் அமைப்பின் விவசாய வேலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள குழு உறுப்பினர்கள் உழுந்து அறுவடையினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேச மக்கள், ஊரும் உறவும் அமைப்பினர் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.






# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புளொட் அமைப்பினரால் நிவாரணம் வழங்கல்

(பழுவூரான்)

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) நிவாரணம் வழங்கியுள்ளது.

ளொட் அமைப்பின் கனடா கிளையினர் மற்றும் பிரித்தானிய கிளை உறுப்பினர் முகுந்தன் ஆகியோரின் நிதியுதவியில் கட்சியின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் ஊடாக இன்று மாவடிவேம்பில் நிவாரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ம.நிஸ்கானந்த ராஜாவின் தலைமையில், கடசியின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் ந.ராகவனால் தெரிவு செய்யப்பட்ட 237 குடும்பங்களுக்கு தலா ஐந்து கிலோ அரிசி வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் கல்குடா தொகுதி அமைப்பாளர் சீ.சங்கரப்பிள்ளை, மாவடிவேம்பு கிராம சேவை உத்தியோகஸ்தர் இர்பான், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க. விஜயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.









# சுகிர்தராஜனின் நினைவு தினம் திருகோணமலையில் அனுஷ்டிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 18 வது ஆண்டு நினைவேந்தல் நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

கடந்த 2006 ஆம் ஆண்டு திருகோணமலை, உவர்மலை கீழ் வீதியில் அமைந்துள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக காலை 6.35 மணிக்கு சுகிர்தராஜன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் சுடப்பட்ட இடத்தில் நேற்று மாலை அகரம் மக்கள் மையம் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தியதுடன், நினைவுப்பகிர்வுகளையும் நிகழ்த்தினர்.









# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய புனருத்தாரன மஹா கும்பாபிஷேகம்

வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் – நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய புனருத்தாரன மஹா கும்பாபிஷேகம் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 5 மணி முதல் ஓமகுண்ட கிரியைகள் நடைபெற்று கும்பாபிஷேகம் நடந்தேறியது.

பிரதான கும்பம் மற்றும் ஏனைய கும்பங்கள் குருமார்களால் உள் வீதி வெளி வீதியில் எடுத்துச் செல்லப்பட்டு யானை குதிரை என்பன வலம் வந்தன.

கும்பாபிஷேகம் நடைபெற்றபோது பெரியளவிலான ட்ரோன் மூலம் ஆலயத்துக்கு பூக்கள் சொரியப்பட்டன.

கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.

விசேடமாக யானை, குதிரை என்பன வரவழைக்கப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
















# சங்குமண்கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு

அம்பாறை மாவட்டத்தில் பழமையும், தொன்மைமிக்க தாண்டியடி, சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலய புனர்நிர்மாண அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தலைவரினால் பிரதான அடிக்கல் எடுத்துச் செல்லப்பட்டு சிவாச்சாரியார் சிவப்பிரம்ம ஸ்ரீ சி.கு. கணேஸ் சமூர்த்திஸ்வர குருக்களினால் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன் மற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக கலாச்சார அபிவிருத்தி உத்தியோத்தர் நிஷாந்தினி மற்றும் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடிஸ்வரன், திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் நிர்வாகத்தினர், ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையால் தமிழக மீனவர்கள் மத்தியில் பதற்றமான சூழல்!

## மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

"தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது கவலையளிப்பதாக உள்ளது. இத்தகைய போக்கு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதில் மத்திய அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது."

– இவ்வாறு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிடுகையில்,

"இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் மீன்பிடிப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், கடந்த 22 ஆம் திகதி



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சமீப காலமாக தமிழக மீனவர்கள் தொடர்ந்து இது போன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது கவலையளிப்பதாக உள்ளது. இத்தகைய போக்கு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதில் மத்திய அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய தொடர் கைது நடவடிக்கைகள், தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பறிப்பதோடு, மீனவ மக்களிடையே அச்சத்தையும், நிச்சயமற்ற சூழலையும் உருவாக்கியுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த மீனவச் சமூகங்களின் கலாச்சார மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை அச்சுறுத்தும் வகையில் உள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தியா – இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவினை அமைப்பதன் மூலம் இது சாத்தியமாகும்.

அப்பாவி மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தவிர்க்கவும், இந்திய மீனவர்களுக்கும், இலங்கைக் கடற்படையினருக்கும் இடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாகவும், உரிய தூதரக வழிமுறைகளை மேற்கொண்டு கூட்டு நடவடிக்கைக் குழுவினை கூட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைந்து விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்." என்று முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

# எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் இளைஞர்களுக்கு வாய்ப்பு கொடுங்கள்

## உதயநிதி கோரிக்கை



எதிர்வரும் மக்களவை தேர்தலில் போட்டியிட இளைஞர்களுக்கு அதிகமாக வாய்ப்பு கொடுங்கள் என்று தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலுவிடம் அமைச்சரும் தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கோரிக்கை வைத்துள்ளார்.

தி.மு.க. பொருளாளரும், மக்களவை உறுப்பினருமான டி.ஆர்.பாலு எழுதிய 'உரிமைக்குரல்', 'பாதை மாறாப் பயணம்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் அமைச்சர் உதயநிதி உரையாற்றுகையில், "டி.ஆர்.பாலு மாமாவை நான் குழந்தையாக இருக்கும்போதிலிருந்தே எனக்குத் தெரியும். என்னை தூக்கி வளர்த்தவர்களின் அவரும் மிக மிக முக்கியமானவர். முன்னாள் முதல்வர் கருணாநிதியின் அன்புக்குரிய தம்பி. நம் முதலமைச்சரின் உற்ற தோழன். தலைமை சொல்வதை அப்படியே ஏற்று செயல்படக்கூடிய செயல் வீரர்.

எதிர்வரும் மக்களவை தேர்தலில் போட்டியிட இளைஞர்களுக்கு அதிகமாக வாய்ப்பு கொடுங்கள் என்று இங்கே கோரிக்கை வைக்கிறேன்." – என்றார்.

எதிர்வரும் தேர்தலில் கூட்டணி கட்சிகளுடன் பேச்சு நடத்த டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க. குழு அமைத்துள்ளது. இக்குழுவில், முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.ராசா, கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.




# கார் விபத்தில் சிக்கினார் மேற்கு வங்க முதல்வர் மம்தா

திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி சென்ற கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய அவருக்கு தலையில் லேசான காயம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று பர்த்வானில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட பின்பு காரில் தலைநகர் கொல்கத்தாவுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது அவர் கான்வாய் செல்லும் வழியில் எதிர்பாராத விதமாக மற்றொரு கார் குறுக்கே வந்தது. இதனால், மம்தா பானர்ஜியின் கார் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் முதல்வரின் முன் நெற்றியில் காயம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.





# சீனாவில் பாரிய தீ விபத்து: 25 பேர் பரிதாபமாகப் பலி!

சீனாவின் ஜியாங்க்ஷி மாகாணத்தில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் சிக்கி 25 பேர் உயரிழந்துள்ளனர் என வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

ஜியாங்ஷி மாகாணத்தின் யூஸுய் மாவட்டத்திலுள்ள வர்த்தக தொகுதி யொன்றின் அடித்தளத்தில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தகவலறிந்த மீட்பு படையினர், தீயணைப்பு வீரர்கள், பொலிஸார் மற்றும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் உடன் செயற்பட்டுள்ளனர்.

அதன்போது, தீவிபத்தில் சிக்கி சுமார் 25 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு அரங்சாங்கம் உறுதிபடுத்தி யுள்ளது. தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறதாக கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஐந்து நாள்க ளுக்கு முன்பு ஹெனான் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காசாவில் 800 பேர் தங்கியிருந்த ஐ.நா. கட்டடத்தின் மீது தாக்குதல்

காசாவில் சுமார் 800 பேர் வரை தங்க வைக்கப்பட்டிருந்த ஐக்கிய நாடு கள் சபையின் கட்டடம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக செய்தி கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் ஆரம்பமான இஸ்ரேல் – ஹமாஸ் போரானது, 100 நாள்களை கடந்தும் இன்னும் தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

அத்தோடு, பணயக் கைதிகள் பாரி மாற்றத்தின் அடிப்படையில் ஹமாஸ் அமைப்பினர் போர் நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவித்திருந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு அதனை நிராகரித்தார்.

இந்த நிலையில், சுமார் 800 பலஸ் தீன அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த



ஐக்கிய நாடுகள் சபையின் முகாமின் மீது டாங்கி தாக்குதல் நடத்தப்பட்டுள்ள தாக தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதலில் 9 பேர் கொல் லப்பட்டுள்ளனர். 75 பேர் வரை காயம டைந்துள்ளனர்.

# குடியரசு கட்சியின் தேர்தலில் டொனல்ட் ட்ரம்ப் முன்னிலை!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக் கான வேட்பாளரை தெரிவு செய்வதற் கான குடியரசு கட்சியின் தேர்தலில் அந்த கட்சியின் வேட்பாளரான முன் னாள் ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் முன்னிலையில் உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ளது.

இந்தநிலையில், அமெரிக்காவின் முன்னணி கட்சிகளான ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சி ஆகிய இந்த தேர்தலில் போட்டியிடும் வேட்பா ளரை தேர்ந்தெடுக்கும் பணியில்



ஈடுபட்டுள்ளன.

இதற்காக ஒவ்வொரு மாநிலங்களி லும், மேற்படி கட்சிகள் தமது வேட்பா ளரை தேர்ந்தெடுப்பதற்கு தனித்தனியே தேர்தலை நடத்திவருகின்றன.

அதன்படி, நியூ ஹம்ப்ஷயர் மாநிலத் தில் குடியரசு கட்சி வேட்பாளருக்கான தேர்தல் நடைபெற்றது. அதில் அமெரிக் காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்திய வம்சாவளியை சேர்ந்த நிக்கி ஹெய்லி உள்ளிட்டோர் போட்டி யிட்டனர்.

இதில் 52.5 சதவீத ஆதரவை பெற்று டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றுள்ளார்.

அதேவேளை, நிக்கி ஹெய்லி 46.6 சதவீத ஆதரவுடன் 2 ஆம் இடத்தில் உள்ளார்

இதன்படி, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளர் தேர்வில் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை யில்உள்ளார்என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கொள்கைகளை தமிழ்க் கட்சிகள் ஏற்றுச் செயற்படுகின்றன

## ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் பெருமிதம்

"ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினுடைய கொள்கைகளை ஏற்று தமிழ் கட்சிகள் செயற்படுகின்றன. புதிய இந்திய தூதுவரை சந்தித்த அனைத்த தமிழ் கட்சிகளும், 13 ஆவது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும். தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்வில் இந்தியா தலையிட வேண்டும் என்று கோரியிருப்பதன்மூலம் எமது நீண்ட கால கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர்."

– இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈழ மக்கள் ஜனநாயக கட்சி நீண்ட காலமாக வலியுறுத்தி வந்திருக்கின்ற அரசியல் தீர்வை அல்லது அரசியல் வழிகாட்டலை இன்று தமிழ் கட்சிகள் ஏற்று அல்லது பின்பற்றி வருகின்றன என்பதை நாங்கள் பெருமையாக எடுத்துக் கொண்டாலும் அல்லது. தமிழ் மக்களுடைய பிரச்சனைக்கான தீர்வை நோக்கி அவர்கள் வலுச் சேர்க்க வேண்டும். எங்களுடன் சேர்ந்து பயணிப்பதில் அல்லது எங்களுடைய கருத்துக்களுடன் இணக்கப்பாட்டிற்க்கு வந்ததையிட்டு நாங்கள் இந்த இடத்திலே பெருமை அடைகின்றோம்.

அதே நேரம் நாங்கள் இன்னும் ஒரு செய்தியை சொல்ல வேண்டி இருக்கிறது.

சமீபத்திலே நாடாளுமன்றத்திலே நீதி அமைச்சரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஒரு விவாதத்தில் கலந்து கொண்டிருந்த பொழுது மலையக மக்களுடைய வாக்குரிமை தொடர்பில் தன்னுடைய பேரனார் ஜி ஜி பொன்னம்பலம் எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு எதிராக நடந்து கொள்ளவில்லை என்ற செய்தியை அவர் ஊடகங்களிலே சொல்லி இருக்கின்றார்..

1949 ஆம் ஆண்டு ஜீ.ஜீ பொன்னம்பலம் மலையக மக்களுடைய வாக்குரிமையையும் அவர்களுடைய பிரஜா உரிமைகளையும் பறிப்பதற்க்காக அரசுக்கு ஆதரவாக செயல்பட்டார் என்கின்ற முழுமையான ஆதாரம் எங்களிடம் இருக்கிறது.

தேவை ஏற்படுகின்ற போது அந்த ஆதாரங்களுடன் ஆதாரங்களை வெளியிட்டு நிரூபிக்க தயாராக இருக்கிறோம் என்பதையும். இந்த இடத்திலே சொல்லிக் கொண்டு. ஏனெனில் அவர்கள் தமிழ் மக்களுடைய, மலையக மக்களுடைய வாக்குரிமையை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியோ அல்லது ஜீ.ஜீ பொன்னம்பலமோ அவர்களோ விதத்திலும் பறிக்கவில்லை அல்லது அவர்களுக்கு எதிராக நடக்கவில்லை என்கின்ற பொய்யான செய்தியை வெளியிட்டு இருக்கின்றார்.

உண்மையிலேயே அவர்கள் அந்த மக்கள், இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக. இந்த நாட்டினுடைய. வருவாய் ஈட்டி கொடுக்கின்ற மக்களுடைய வாக்குரிமையையும், பிரஜா உரிமையையும் தங்களுடைய சுய அரசியல் இலாபத்திற்க்காக அமைச்சு பதவிை பெறுவதற்காகவும் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்கின்ற ஆதாரங்களும் எங்களிடம் இருக்கின்றது என்பதனையும் இந்த இடத்தை நாங்கள் தெரியப்படுகின்றோம். தேவைப்படுகின்ற போது. ஆதாரத்துடன் மக்கள் மத்தியில் வெளியிடுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

அதேபோன்று இன்னும் ஒரு செய்தியை நாங்கள் சொல்லவேண்டியவர்களாக இருக்கின்றோம். இணையவழி சட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு தரப்புகள் பல்வேறு விதமான கருத்துக்களை சொல்லி வருகிறார்கள். ஆனால் , வழியிலே செல்கின்றவனுக்கு மடியிலே கனம் இருந்தால் தான் பயம் என்று ஒரு பழமொழி ஒன்று சொல்லுவார்கள்.

உண்மையிலே இன்று நாங்கள் பார்க்கின்ற போது அது கருத்து சுதந்திரத்தை தடுக்குமா என்கின்ற. கருத்துக்கள் எல்லாம் சொல்லப்படுகின்றன. சமீபத்திலே நாங்கள் ஒரு சிறிய உதாரணத்தை பார்க்கலாம்.

புலிகளை இயக்கத் தலைவர் பிரபாகரனுடைய மகள். துவாரகா உரையாற்றுகின்றார் அவருடைய தந்தையார் போன்று 14 வருடங்களுக்கு பின்னர் உரையாற்றுகின்றார் என்று பல்வேறு வழிமுறைகளிலும் இணைய வழியில் துஷ்பிரயோகம் செய்து இருக்கின்றார்கள்.

இதே போன்ற பெண்கள் சம்பந்தமான பல்வேறு விடயங்கள் இணையங்களில் வருகின்றன. ஆகவே உண்மையான செய்திகளை வெளியிட்டி வருகின்ற எவரும் இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டிய தேவை ஏதும் இருக்கும் என்று நாங்கள் கருதவில்லை.

மாறாக தவறான கருத்துக்களையோ, அல்லது உண்மைக்கு புறம்பான செய்திகளையோ அல்லது. உண்மைக்கு புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தான் இதில் அச்சமடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

குறிப்பாக பெண்கள் சம்பந்தமான பல்வேறு விடயங்கள். இணைய தளங்களிலேயே கட்டுப்பாடு இல்லாமல் ஒரு நெறிப்படுத்தல் இல்லாமல் வெளியிடுவதன் ஊடாகவும். இவர் குடும்பப் பெண்கள் உட்பட பல யுவதிகள். தவறான முடிவெடுத்துக் கொண்டுள்ள செய்திகளையும் நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம்.

இவ்வாறான இணைய தளங்களில் வெளியாகிய செய்திகளை பார்த்து அவமானம் அடைந்துள்ளனர்.

ஆகவே ஒரு கட்டுப்பாடுகளோ நெறிப்பாடுகளோ இல்லை. அதே நேரம் மக்களுடைய கருத்து சுதந்திரம் தடுக்கப்படுமாக இருந்தால் ஈழமக்கள் ஜனநாயக கட்சி இவ்விடயமாக மீள் பரிசீலனை செய்யும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்." – என்றார்.